செய்தி வெளியீட்டு எண்.102 நாள்.16.02.2017

## பத்திரிக்கை செய்தி

**திருவள்ளூர் மாவட்டத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தில் கிராம சுகாதார செவிலியர் (VILLAGE HEALTH NURSE) பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகிறது என மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் சென்னை–6 **கிராம சுகாதார செவிலியர் (VILLAGE HEALTH NURSE)** பணிக்காலியிட அறிவிப்புகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

### கல்வித்தகுதி

1. **தமிழக அரசின் கல்விநிறுவனம் அல்லது தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செவிலியர் கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட கீழ்வரும்படியான கல்வித்தகுதி.**

   அ) 15.11.2012 தேதிக்கு முன்னர் பள்ளியிறுதி வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தேர்ச்சி பெற்று 18 மாத பேறுகால துணை செவிலியர் (ஏ.என்.எம்) கல்வித்தகுதி அல்லது பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் கல்வித்தகுதி பெற்றவர்கள் (பெண்கள் மட்டும்)

   ஆ) 15.11.2012-க்கு பிறகு மேல் நிலை கல்வித் தேர்ச்சியுடன் 2 வருட பேறுகால துணை செவிலியர் (ஏ.என்.எம்) கல்வித்தகுதி அல்லது பல்நோக்கு சுகாதாரபணியாளர் சான்றிதழ் பெற்றவர்கள் (பெண்கள் மட்டும்)

மேலும், Tamil Nadu Nursing Council-ல் மனுதாரர் தமது செவிலியர் பயிற்சியினை பதிவு செய்திருக்கவேண்டும்.

**வயது வரம்பு – (01.07.2016)- தேதிப்படி**

ST, SC, SCA, MBC, BC, BCM – 18 முதல் 57 வயது வரை.

இதர பிரிவு (OC) – 18 முதல் 40 வயது வரை

ஆன்லைன்மூலம் மேற்படி பணியிடத்திற்கு விண்ணப்பிக்க **கடைசி தேதி: 24.02.2017**

மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் அறிவித்துள்ள கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களுக்காக மாநில அளவில் 2804 பணியிடங்களை நிரப்பிட வேண்டி, தகுதியுடைய மனுதாரர்கள் விண்ணப்பிக்க செய்தி வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் இணைய தளமான **www.mrb.tn.gov.in–ல் ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.**

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~